[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

7. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(இ) ஓய்வுபெறும் சட்டமன்றப் பேரவை அலுவலர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்செயலகத்தில் 32 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றி பேரவை தொடர்புடைய அலுவல்கள் சரிவர நிறைவேற்றப்பட மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கிய இணைச் செயலாளர் திரு. சா. கணேசன் அவர்கள் இன்று (31—10—2002) பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இச்செயலகத்தில் 34 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றி பேரவை தொடர்புடைய அலுவல்கள் சரிவர நிறைவேற்றப்பட மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கிய குழு அலுவலர் திருமதி வீ.நா. உமா அவர்களும் இன்று (31—10—2002) பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெறுகிறார். அவருக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானங்கள்–தொடர்ச்சி

(ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள். (குறுக்கிடு)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஒரு வேண்டுகோள்.